REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 7 காசுகள் (0—1—0) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 24உ சனி (6—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 25உ ஞாயிறு (7—4—57) [இதழ் 256

'கி. பாகிஸ்தான் சுயாட்சி கோரிக்கை புதிதல்ல'

'பன்னிரண்டு அம்ச தேர்தல் திட்டத்தில் அதுவும் ஒன்றாகும்'

'நியாயமான குறைபாடுகள் களையத் தவறியதின் விளைவாகும்'

பாகிஸ்தான் மத்திய அமைச்சர் அவைக்குள் கருத்து வேற்றுமை

கராச்சி, ஏப். 6—

'கிழக்கு பாகிஸ்தானிலுள்ள 420 இலட்சம் மக்களின் பிரதிநிதித்துவத்தைக்கொண்ட கி. பாகிஸ்தான் சட்டசபையின் உறுப்பினர்கள் ஒருமனதாக சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளனர். ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள அத்தீர்மானம், பாகிஸ்தான் பகைவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது எனக் கூறப்படுமானால், கி. பாகிஸ்தான் மக்கள் அனைவரையும் பாகிஸ்தான் பகைவர்களாகத்தான்கொள்ள வேண்டும். அம்மக்களின் புதிய கோரிக்கையல்ல இது. பன்னிரண்டு அம்ச தேர்தல் அறிக்கையிலேயே இக்கோரிக்கை இடம் பெற்று இருக்கிறது!'

—இவ்வாறு, பாகிஸ்தான் மத்திய அமைச்சர் அவையில், தொழில் அமைச்சராக இருந்துவரும், அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த காலிக் என்பார் அறிவித்துள்ளார்.

"இந்தத் தீர்மானம், கிழக்கு பாகிஸ்தான் மக்களின் களையப் படாத நியாயமான குறைபாடுகளின் விளைவாகும். குறைபாடுகளுக்குப் பரிகாரம் தேடாதிருந்தும் அல்லது அவைகளை அகற்ற உண்மையில் முயற்சிக்காது இருந்துவிட்டு, அவைகளுக்குப் பரிகாரம் வேண்டும் என முழக்கமிடும் மக்களை நிந்திக்கக்கூடாது. நாம் கடந்த காலத்தில் செய்துள்ள தவறுகளை உடனடியாகத் திருத்திக் கொள்வதற்கான அரிய காலம் இதுவேயாகும்,"

என்றும் அந்த அமைச்சர் அறிவித்துள்ளார்.

அவாமி லீக் அமைச்சரின் மேற்படி கருத்துக்கு மாறாக, ரிபப்ளிக் கட்சி அமைச்சரான தால்பூர், தம்முடைய கூட்டு அமைச்சர்களைக் கலந்துகொள்ளாமலேயே, கிழக்கு பாகிஸ்தான் சுயாட்சி முயற்சியை இரும்புக் கரங்கள் கொண்டு பொடி பொடியாக்கிவிடப் போவதாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரதமரான சுராவர்த்தி, பாகிஸ்தானை பலத்தாழ்வாக்கக் கூடிய சுயாட்சி முயற்சியை முழு மூச்சுடன் எதிர்க்கப்போவதாகக் கூறியுள்ளார்.

கேரளத்தில் நிலையற்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளி!

ஆட்சிப் பொறுப்பை பொதுவுடமை கட்சியினர் ஏற்றனர்

திருவனந்தபுரம், எப். 6—

கேரளத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில், இந்தியாவிலேயே முதல் தடவையாக ஆட்சிப் பொறுப்பில் அமரும் கம்யூனிஸ்டுக் கட்சியினரின் பதவி ஏற்பு வைபவம் சேற்று 12 மணியளவில் நடைபெற்றது. மாகில கவர்னர், பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

'கடவுள் சாட்சியாக பதவி ஏற்கிறேன்' என்று சொல்ல மறுத்துவிட்டு, 'இந்திய அரசியல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டும் விசுவாசமாகவும் நடப்போம்,' என்று ஒப்புதலளித்து அவர்கள் பதவி ஏற்றனர்,

பதவி ஏற்பதற்கு அவர்கள் கவர்னர் மாளிகைக்கு வரும்போது காரில், 'அரிவாள்—சுத்தி' சின்னம் பொறித்த கம்யூனிஸ்டுக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு வந்தனர்; ஆனால், பதவியேற்றுத் திரும்புகையில் மூவர்ண தேசீயக் கொடி பறந்துகொண்டிருந்த அரசாங்கக் கார்களில் சென்றனர்.

இந்த வைபவங்களுடன், கேரளத்தில் நிலையற்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல் சரித்திரத்தில் ஒரு புதிய சோதனையாம்!

கேரள அமைச்சரவை குறித்துக் கவர்னர் கருத்து?

திருவனந்தபுரம், எப். 5—

"இந்தியாவில் மட்டுமன்றி உலக அரசியல் சரித்திரத்திலேயே ஒரு புதிய சோதனை ஆரம்பமாகிறது. உலகம் பூராவுமே இன்று, கேரளத்தில் நடப்பதை உற்று நோக்குகிறது' என்று கேரள கவர்னர் டாக்டர் இராமகிருஷ்ண ராவ் கூறியுள்ளார்.

டாடா கம்பெனியின் தற்காலிகத் தொழிலாளர் அவதி

150 பேர் நீக்கப்பட்டனராம்

ஜாம்ஷெட்பூர், எப். 5—

டாடா கம்பெனியில் பணியாற்றும் 150 தற்காலிக ஊழியர்கள் வேலையினின்றும் நீக்கப்பட்டனராம்.

கம்பெனியின் நிர்வாகி அலுவல்களை முடித்துக்கொண்டு புறப்படும்போது அந்த ஊழியர்கள், அவருடைய காரை நிறுத்தி, தங்கள் குறைகளை எடுத்துரைத்து, ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

உடனே போலீசார் வரவழைக்கப்பட்டு, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைக்கப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

கெய்ரோ, எப். 5—

எகிப்திலுள்ள மசூதிகள் மாதா கோவில்கள் ஆகியவற்றில் பிச்சை எடுக்கக் கூடாதென்று அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்!

அங்குள்ள பிச்சைபோடும் பெட்டிகளும் அகற்றப்பட்டுவிடுமாம்!

'நயா பைசா'வால் ஏற்படும் குழப்பம்

சென்னை பஸ் போக்குவரத்து நிலைபற்றி விளக்கம்?

சென்னை, ஏப். 5—

புதிய 'நயா பைசா' நாணயங்கள் பொது மக்களைப் பாதிப்பது புலனாகிவிட்டது. தசாம்ச நாணய முறையில் பழைய நாணயங்களுக்குச் சரிசமமான நாணயங்கள் இல்லாததால் சங்கடம் ஏற்பட்டுள்ளது. பின்னத்தை முழுமையாக்கி வசூலிப்பது பொது மக்களைப் பாதிக்கிறது; பின்னத்தை விட்டுவிட்டால் நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே, சென்னை அரசாங்கம் நடத்திவரும் பஸ் போக்குவரத்தில் கட்டணங்களை உடனடியாக மாற்றியமைக்கும் யோசனை இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டண உயர்வை பொது மக்கள் வரவேற்கமாட்டார்கள் என்பதை அதிகாரிகள் உணர்ந்து கொண்டனர்.

அணுவுக்குச் சமமான நயா பைசா கட்டணத்தை வைக்காமல், அதிகார பூர்வமான மாற்று விகிதத்தை அனுசரிப்பதால் போக்குவரத்து இலாகாவுக்கு நாள்தோறும் ரூ. 1,000 நஷ்டமேற்படுகிறதாம்.

'நியாயத்திற்கு மாறான செய்கையாகும்'

"புதிய நாணயம் அமுலுக்கு வந்துள்ளதைக் காரணமாகக் கொண்டு நகரில் ஓட்டல்காரர்களும், சிறு வியாபாரிகளும் பொருள்களின் விலையை ஏற்றியது நியாயத்திற்கு முற்றிலும் மாறான செய்கையாகும்"

என்று, சென்னை மாவட்டக் கலெக்டர் குறிப்பிட்டிருக்கிறார்.

தபால் இலாகா தவறு?

தபால் இலாகாவினர் மீதே மக்கள் கண்டனப் பார்வை செலுத்துகின்றனர். டில்லிப் பேரரசால் வெளியிடப்பட்ட நாணய மாற்றுப்பட்டியல்படி கார்டு, கவர் ஸ்டாம்பு கட்டணங்களை அவர்கள் வசூலிக்கவில்லை.

தாய்க்குலம் அளித்த வாக்குகள் கழகத்தின் பெருமதிப்புக்குச் சான்றாகும்

மு. கருணாநிதி முழக்கம்

"நாம் தேர்தலில் போட்டியிடப் போகிறோம் என்றவுடன், கனம் காமராசர் சொன்னார்—'இவர்களுக்கு யார் ஓட்டு போடப்போகிறார்கள்? அதுவும் பெண்கள் ஓட்டு போடவேமாட்டார்கள்' என்று! ஆனால், அவர் போட்ட கணக்கு தப்புக் கணக்கு என்பது தோழியர் சத்திவாணிமுத்து அவர்களுக்கு, இத்தொகுதியில் பெண்கள் அளித்தஓட்டுகளே சான்றாகும்; அது மட்டுமல்ல—குளித்ததலையில், தி. மு. கழகத்திற்கு 11 ஆயிரம் பெண்கள் ஓட்டளித்திருக்கிறார்கள். இவைகளே போதும்—காமராசரின் கணக்கு தப்பு என்பதைநிரூபிக்க!

"திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபடும் இயக்கம்—தாயக விடுதலைக்குப் பாடுபடும் இயக்கம்—தாய்க்குலத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் இயக்கம் என்பதை அறிந்து மக்கள் நமக்கு பதினாறு இலட்சத்து இருபத்திஎட்டாயிரம் வாக்குகள் அளித்திருக்கிறார்கள்"

என்று, சென்னை - சூளை ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகச் சார்பில், கலியாண மேஸ்திரி தோட்டத்திற்கு அருகில் நடைபெற்ற, தோழியர் சத்தியவாணி முத்து பாராட்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் சொன்னார்;—

"காங்கிரஸ் தன் அதிகாரத்தைக் காட்டி - படைபலத்தைக் காட்டி - பண பலத்தைக் காட்டி- மிரட்டியும்கூட பெற்ற ஓட்டுக்கள் 50 - இலட்சந்தான். தி. மு. கழகம் போதிய பணவசதியில்லாமல் - கார் வசதியின்றி - பிரச்சார வசதியின்றி பெற்ற ஓட்டுக்கள் ஏறத்தாழ 17-இலட்சம். காங்கிரஸ் பெற்ற ஓட்டுக்கள் அவ்வளவும் மக்கள் மனப்பூர்வமாக ஆதரித்து விழுந்த ஓட்டுக்களா? கிடையவே கிடையாது. காங்கிரஸ் பெட்டியில் விழுந்த ஓட்டுகளில் கம்யூனிஸ்டு, பி. சோ., திராவிடர் கழகம் ஆகிய கட்சிகளின் ஓட்டுகள் உண்டு.

"நாம் சட்டசபையில் 15 பேர்களும் — பாராளு மன்றத்திற்கு 2 பேர் வெற்றி பெற்றோம் என்பதையறிந்து, 'சட்டசபையில் இந்த 15 பேர் என்ன செய்ய முடியும்?' என்று அங்கலாய்த்தார்கள்; 'இவ்வளவு பேர்தானா?' என்று ஆச்சரியப்பட்டார்கள்; 'அவ்வளவுதானே?' என்றார்கள் சிலர். மாற்றுக் கட்சியினர் ஒருவர்கூட நம்மை வரவேற்கவில்லை.

"அண்மையில், சட்ட மன்ற முன்னாள் செயலாளராக இருந்த ஆர். வி. கிருஷ்ண அய்யர் என்பார், அரசியல் விமர்சனம் செய்த ஒருக் கூட்டத்தில் நாட்டில் உண்மையான எதிர்க் கட்சி-ஒரு நல்ல எதிர்க் கட்சி - காங்கிரசை எதிர்க்கக்கூடிய வலுவான ஓர் எதிர்க் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்று குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல — 'சுதேசமித்திரன்,' 'இந்து,' 'தினமணி,' 'ஆனந்த விகடன்,' 'கல்கி' போன்ற ஏடுகளும்—தினசரி பத்திரிகைகளும் எழுதின; ஆனால் அவைகள் தேர்தலுக்கு முன்னால் எழுதவில்லை.

நம்மிடம் மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள்; அவர்கள் நம்பிக்கை வீண்போகாவண்ணம் எப்பொழுதும் பாடுபடுவோம்.

"இந்தத் தேர்தலில் காங்கிரசுக்கு அடுத்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பது நிரூபணமாகிவிட்டது. 'நாங்கள்தான் காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சி,' என்று சொல்லிக்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★

அறிவிப்பு

புதிய காசு போதிய அளவு கிடைக்கப் பெறாத காரணத்தால், மறுஅறிவிப்பு வரையில் 'நம் நாடு' தனி இதழின் விலை வழக்கம்போல் 1-அணுவுக்கே விற்கப்படும்.

—நிர்வாகி: 'நம் நாடு'

★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—4—57 சனி

நயா பைசா!

அணு—பை நாணய ஏற்பாட்டிலிருந்து தசாம்ச நாணய ஏற்பாட்டிற்கு மக்கள் செல்லுவதை, சந்தடியற்ற புரட்சி என்று இந்தியப் பிரதமர் சித்தரித்துள்ளார். ஆனால், அப்புரட்சி அவர் கூறுவதுபோல் சந்தடியற்றதாக இருக்கவில்லை. மக்களிடத்தில் பெருங்குழப்பத்தையும், கொந்தளிப்பையும், பண நஷ்டத்தையும் உருவாக்கிவிட்டுவிட்ட இரைச்சல் புரட்சியாகவே இருக்கிறது.

பழைய செலாவணி ஏற்பாட்டைக் காட்டிலும் புதிய தசாம்ச செலாவணி ஏற்பாடு சிறந்ததாகும் என்பது உண்மையானாலும், புதிய தசாம்ச நாணயம் போதுமான அளவு பொதுமக்கள் கைக்குக் கிடைக்கின்ற வரையில், அதற்கான வழிவகைகளை அரசாங்கம் தீவிரமாக மேற்கொள்ளுகின்ற வரையில், புதிய நாணய முறையினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவர் என்பதில் சந்தேகமில்லை. பழைய நாணயங்களைப் புதிய தசாம்ச நாணயங்களுக்கு மாற்றுவதில் கணிசமான தொல்லையையும், பண நஷ்டத்தையும் பொதுமக்கள் அடைந்துவருகின்றனர்.

பழைய நாணயங்களுக்கும் புதிய நாணயங்களுக்கும் உள்ள நாணயமாற்று விகிதத்தை அரசாங்கம் வரையறுத்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றது, ஆனால், அந்த நாணயமாற்று விகிதத்தை அரசாங்கமேகூட திட்டவட்டமாகப் பின்பற்ற மறுக்கிறது. ஒரு புதியகாசுக்கும் குறைவாக உள்ள பின்னமான நாணய மதிப்பை, அப்பின்னத்திற்கு அடுத்துள்ள முழு நாணய அளவாகக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துக்கொண்டு இருக்கிறது.

எடுத்துக்காட்டாக வேண்டுமானால் அஞ்சல் நிலயங்களில் விற்கப்படும் அஞ்சல் பில்லைகள் உறைகளின் விலைகளைக் குறிப்பிடலாம். ஏற்கனவே இரண்டு அணு அஞ்சல் உறைக்கு அரசாங்கம் வெளியிட்டுள்ள நாணய மாற்று விகித அறிக்கைப்படி, 12 புதிய காசுகள் தான் கொடுக்க வேண்டும். ஆனால், அஞ்சல் நிலயமோ அதைப் பின்பற்றவில்லை. அதற்கு மாறாக, 13 புதிய காசுகளுக்கு, முன்னாள் 2 அணு அஞ்சல் உறையை விற்று வருகிறது.

இவ்வாறு விற்பதின் மூலம் 2 அணு அஞ்சல் உறை ஒன்றுக்கு ½ புதிய காசு விதம் அதிகப்படியாக அரசாங்கம் பெற்று வருகிறது. அரசாங்க வரையறைப்படி 2 அணு அஞ்சல் உறையை 12 புதிய காசுகள் விதம் விற்கப்படுமானால், ஒவ்வொரு உறைக்கும் ½ புதிய காசு அரசாங்கத்திற்கு நஷ்டமாகிறது.

பொதுமக்கள் அடையும் நஷ்டம் இந்த ½ காசு அளவுடனும் நின்றுவிடுவதில்லை.

பழைய 2 அணாவையும் கொடுத்து புதிய காசு ஒன்றைக் கூடுதலாகக் கொடுக்க, அக்காசு கைவசம் இல்லாத காரணத்தால், பழைய காலணாவையே கொடுக்கவேண்டி இருக்கிறது. அதன் பலனாக மேலும் கொஞ்சம் கூடுதலான நஷ்டத்தைப் பொதுமக்கள் அடைய வேண்டியவர்களாகிறார்கள்.

காலணாவிற்கு 2 புதிய காசுகள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் அஞ்சல் நிலயத்திலோ, அந்த அரசாங்க நாணயமாற்று விகிதத்தை ஒப்புக்கொண்டு, 2 அணு உறைக்கு புதிய நாணயமாற்று விகிதப்படி 2¼ அணு கொடுத்தால், ஒரு புதிய காசு திருப்பித்தர அஞ்சல் நிலயம் முன்வருவதில்லை. இதன் விளைவாக அரசாங்கத்திற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியதைவிடக் கூடுதலாக வருமானமும், பொதுமக்களுக்கு சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய நஷ்டத்தைவிட கூடுதலான நஷ்டமும் கிடைத்து வருகிறது.

புதிய காசு ஏற்பாட்டில் இரண்டணு அஞ்சல் உறையை 12½ காசுக்குத்தான் அரசாங்கம் விற்கவேண்டும். ஆனால் அரசாங்கமோ 13 காசு என விலையைக் கூட்டி விற்பதின் மூலம், அஞ்சல் உறையின் விலையை முன்னினும் கூடுதலாக உயர்த்திவிட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் கூறியுள்ளது போன்று, மக்களுக்கு அறிவிக்காது நாணயமாற்று பெயரில் அஞ்சல் விலையைப் பொதுவாக உயர்த்தி இருக்கும் இந்தியப் பேரரசின் போக்கை சந்தடி இல்லாத புரட்சி என்று தான் குறிப்பிட வேண்டும்!

புதிய நாணயத்திற்கு மாறும் ஒரு ஏற்பாட்டைப் பகலாகக்கொண்டு, அதன் பெயரால், நியாயமாகப் பெறவேண்டியதற்குக் கூடுதலாகப் பெற, அரசாங்கமே முன்வருகின்றபொழுது, வியாபாரிகளும் மற்றவர்களும், இம்முறையின் மூலம் புதிய இலாபம் அல்லது வருமானம் பெற முயற்சிப்பதில் குற்றம் ஏது?

சென்னை கூட்டுறவு பண்டவிற்பனை நிலயத்தில் ஒருவர், ரூ. 4-55 காசு மதிப்புடைய பொருட்களை வாங்கினார். அதற்கு பத்து காசு விற்பனைவரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பழைய நாணயத்தில் அதற்கு 1—3 அணுதான் விற்பனை வரியாக வசூலிக்க வேண்டும். அதாவது அந்தொகைக்கு 8 காசுகள் என அரசாங்க அறிக்கை கூறுகிறது. ஆனால் பண்டங்களை வழிபர் வசூலித்து இருப்பதோ பத்து காசு ஆகும்.

வங்காள அரசாங்கமும், தனது ஆதிக்கத்தின் கீழ் ஓடும் பஸ் கட்டணத்தை, அரசாங்க வரையறைக்கு மாறாக உயர்த்திவிட்டிருக்கிறது. அதாவது ஒரு அணு கட்டணத்திற்கு 7 காசு விதம் வசூலிக்க முனைந்துவிட்டது.

புதிய நாணய முறையின் பெயரால் அஞ்சல் பில்லைகளின் விலை கூட்டப்பட்டு இருக்கிறது. அதுபோன்றே அச்சுத் தாள்களின் விலையும் அறிவிட்டிருக்கிறது. அச்சடிப்பதற்கான மற்ற பொருட்களின் விலையும் அதிகரித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், நாம் விரும்பாத நிலையிலும். பெருங்கவலையுடன் 'நம் நாடு' இதழின் விலையைக் கூட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நிர்வாகம் தள்ளப்பட்டுவிட்டது. அதன் விளைவுதான் 'நம் நாடு' இதழ் 7 காசாக உயர்த்தியிருப்பது என்பதைப் பணிவன்புடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

உரிமையை விட்டுத்தர எகிப்து இணங்கவில்லை

அமெரிக்க அமைச்சருக்கு எகிப்தின் கண்டிப்பான பதில்

லண்டன், ஏப். 4—

சர்வதேச நிர்வாகத்திற்கு சூயஸ் கால்வாயை உட்படுத்த முடியாது என்று எகிப்து திட்டவட்டமாக அறிவித்து விட்டதாம்!

கால்வாய் நிர்வாகம்பற்றி எல்லோராலும் ஒப்பி சமரசத்திற்கு வருவதற்குபேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கும்படியும், 48 மணி நேரத்திற்குள் பதில் தருமாறும் அமெரிக்க அமைச்சர் டல்லஸ் கோரியதற்கு இணங்கவே எகிப்து, இவ்வாறு அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குற்றச்சாட்டால் மனவேதனையுற்றார்

ஏழடுக்கு மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டார்

கெய்ரோ, ஏப். 4—

கனடாவின் தூதுவராக எகிப்தில் ஹெர்பர்ட் நார்மன் பதவியிலிருந்தார்.

இவரை ஒரு கம்யூனிஸ்டு என்று சென்ற மாதம் அமெரிக்கா குற்றம் சாட்டியதாம்.

நார்மன் மிகவும் மனச்சாட்சியுள்ள அதிகாரியாம்; அதனால் அவர், சுவிட்சர்லாந்து நாட்டின் தூதுவராலயத்தின் ஏழாவது மாடியிலிருந்து கீழ் குதித்துத் தற்கொலை செய்துகொண்டதாக அறிக்கை ஒன்றின்மூலம் தெரிகிறது.

நெடுஞ்சாலைகளுடன்

சிறிய பாதைகள் இணைப்பு

புதுடில்லி, ஏப். 5—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், நாட்டின் எல்லா சிறிய ரோடுகளையும் தேசியப் பெருஞ்சாலைகளுடன் இணைப்பதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்படுமாம்.

இரண்டாவது திட்டத் துவக்கத்தில் மொத்தம் 12,900 மைல்கள் நீளத்திற்கு நாட்டின் நெடுஞ்சாலைகள் இருந்தனவாம். இதன் அபிவிருத்திக்காக மேற்கொண்டு ரூ. 55 கோடி, திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்காக ஒதுக்க நிர்ணயித்தது ரூ. 87½ கோடியாகும்; பின்னர் இது ரூ. 55 கோடிக்குக் குறைக்கப்பட்டது; பாக்கித் தொகை மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமாம்.

இத்திட்டத்தின்படி பெருஞ்சாலைகள் இணைப்புக்கு 1,300 மைல் நீளரோடும் 114 பெரிய பாலங்களும் கட்டப்படவேண்டும். தற்பொழுது இருக்கும் 4,000 மைல் நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துவதும் 3,300 மைல் சரக்கு இருவழிப் போக்குவரத்துக்காக அபிவிருத்தி செய்வதும் இத்திட்டத்தில் அடங்கும்.

ஆனால் பெரிய ரோடுகளுடன் இணைப்பதற்கான 900 மைல் நீள சாலைகளை அமைப்பதும், 60 பெரிய பாலங்களைக் கட்டுவதும் 4,000 மைல்கள் நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதும், 1,500 மைல்கள் ரோடுகளை இருவழிப் போக்குவரத்துக்காக அபிவிருத்தி செய்வதுந்தான் இரண்டாவது திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப் படவேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம் :

அல்லல் அதிகரிக்கிறது - ஆவன செய்ய முன்வாருங்கள்!

ஐயா,

புதுவை மக்களுக்குப் பலவகையிலும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது; அது மேலும் மேலும் வளர்ந்து தொல்லை தரும் அளவுக்கு வந்துவிட்டது.

உணவுப் பொருட்களில் விலையேற்றம் குறைந்தபாடில்லை. மற்றும், வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களும் நாளுக்கு நாள் விலையேறிகொண்டே போகின்றன!

மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை; வாங்கும் சக்தி பெருகவில்லை. சாதாரண ஏழை மக்கள்—நடுத்தர மக்களின் பாடு, திண்டாட்டமாகிவிட்டது.

அரசாங்க அலுவல்களுக்குப் புதுவை மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்; சிறிய உத்தியோகத்திற்குக்கூட வெளி மாநிலங்களிலிருந்தே ஆட்கள் இறக்குமதி செய்யப்படுகிறார்கள்! இதனால், இங்கு படித்தவர்கள் நிலை, பரிதாபத்துக்குரியதாயிருக்கிறது!

தொழிலாளரின் துன்பம் பெருகிவிட்டது. ஒப்பந்தத்திற்குப் புறம்பாக 'அவாடு' முறை புகுத்தி, வேண்டுமென்றே தகராறுகளைக் கிளப்பித் தொழிலாளர்களை வெளியேற்றி வருகின்றனர், மில் முதலாளர்கள்! இப்பொழுது, வெளிமாநிலங்களிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்து, புதுவைத் தொழிலாளர்களைப் பழிவாங்கவும் முற்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

வடநாட்டு வணிகர்கள் நுழைவு பெருகிவிட்டது! சரக்குகள் வரவழைக்கும் உரிமை பெற்றவர்களிடம் அவர்கள் 'பேரம்' பேசுவதன்மூலம், புதுவையில் இறக்குமதியாகும் சரக்குகள் இங்கு விற்பனையாகாமல், வெளிமாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்றனவாம். பொருட்களின் விலையேற்றத்திற்கு அவர்களே காரணமாம். அவர்களால், புதுவை வணிகர்கள் நிலையும் திண்டாட்டமாகிவிட்டதாம்!

வீட்டுப் பஞ்சமோ எல்லை கடந்துவிட்டது! எண்ணிக்கைக்கு ஏற்றபடியல்லாமல், தேவைக்கு அதிகமாக நூற்றுக்கணக்கில் வீடுகளை விலைக்கு வாங்கியும், வாடகைக்கு எடுத்தும் வரும் அரவிந்த ஆசிரமத்தினராலும், வடநாட்டு வணிகர்களின் பெருக்கத்தாலும், பல நூற்றுக்கணக்கில் வெளிமாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களாலும், இன்று புதுவையில் வீடே கிடைப்பதில்லை! இதனால், வாடகையும் ஆறு ஏழு மடங்கு உயர்ந்துவிட்டிருக்கிறது. ஒரு சிறிய வீட்டிற்குக்கூட ரூ. 300-க்கு மேல் முன்பணம் கேட்கப்படுகிறது! வாழ்க்கைத்தரம் உயராத புதுவை மக்கள்—குறைந்த வருவாயைக்கொண்டு காலாகாலமாகப் புதுவையில் வாழ்ந்துவருபவர்கள், இன்று வீடு பெற முடியாமல், சுற்றுப்புறச் சிற்றூர்களுக்குக் குடியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளார்கள்!

சர்க்கார் அலுவலகங்களில் எந்த வேலையும் துரிதமாக நடைபெறுவதில்லை என்றும், இலஞ்ச ஊழல் பெருகிவிட்டதென்றும் கூறப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்ட உதவி நிதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படாமல், கட்சியை வளர்ப்பதற்கும், காண்ட்ராக்ட் மூலம் கங்காணிகளைப் பெருக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறதாம். 'காந்தி நகர்' அமைத்த விதமும், அதன் காண்ட்ராக்ட் முறையும்மக்களால் கேலி செய்யப்படுகிறது. காந்தி நகரில் குடியேற மக்கள் மறுக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

பொதுவாகப் புதுவை மக்கள் குறை பெருகிவிட்டது! அல்லல் அதிகமாகிவிட்டது!

இந்த நிலையை வளரவிடுவது, ஆட்சியாளருக்கு அழகுமல்ல! நல்லதுமாகாது!

சட்டசபை உறுப்பினர்களே, புதுவை மக்களின் குறைகளை உணருங்கள்! அவற்றைப் போக்க விரைவில் முயலுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம்,
புதுவை.

ஏகாதிபத்திய வெறி தணிந்து வருகிறது!

அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் இனி மரண தண்டனை இல்லை

நிகோசியா, ஏப். 4—

அவசரச் சட்டத்தின்கீழ் இதுவரையில் சைப்ரசில் மரண தண்டனை விதிக்கப்பட்டு வந்தது; இனி இந்தச் சட்டத்தின்கீழ் மரண தண்டனை விதிப்பதற்கு இந்தவகையில் மாற்றம் செய்யப்பட்டு விட்டதால்!

ஆனால், துப்பாக்கி, வெடிகுண்டுகளின் மூலம் காயமேற்படுத்தும் நோக்கத்துடன், துப்பாக்கியைக் கொண்டு சென்றாலும், சுட்டாலும், வெடிகுண்டை எறிந்தாலும் மரண தண்டனை விதிப்பதற்கு இந்தச் சட்டம் இடம் தருகிறது.

பாராளுமன்றத் தேர்தல்முடிவுகள்

மக்கள் சபைக்கு நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் அனைத்தும் வெளியாகிவிட்டன.

11 நியமன உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 505 பேர்கள் மக்கள் சபையில் இடம் பெறுவர்.

நடைபெற்ற தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸ் 365 இடங்களை மட்டுமே கைப்பற்றியிருக்கிறது.

எதிர்க் கட்சிகளும், சுயேச்சைகளும் 123 இடங்களில் காங்கிரசை முறியடித்து வெற்றி பெற்றுள்ளனர்.

மருத்துவ சிகிச்சைக்கு பாம்பின் நஞ்சு!

குருதிப் போக்குடன் ஏற்படும் பிணிகளைத் தீர்க்குமாம்!

"குருதிப் போக்கை (தானாக ஏற்படுவதையும், இரண சிகிச்சைக்குப் பிறகு ஏற்படுவதையும்) தடுத்து நிறுத்துவதற்காக பாம்பின் நஞ்சைப் பயன்படுத்துவதற்குப் புராதன காலத்திலேயே முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பாம்பின் நஞ்சைக்கொண்டு தயாரிக்கப்பெற்ற மருந்துகள் ஏற்கனவே பிரயோகிக்கப்பட்டன; ஆயினும் இந்த நஞ்சு வயிற்றில் போய்ச்சேர்ந்ததும் மருத்துவச்சக்தி யற்றதாகிவிட்டது.

கடந்த 5 ஆண்டுகளாக இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டனவாம். மத்திய ஆசியாவில் காணப்படும் 'கர்ஜா' என்ற வகை பாம்பை வைத்துக்கொண்டு சோதனைகள் செய்யப்பட்டன.

இப்பாம்பின் நஞ்சுவிலிருந்து 'பாக்டீரியா' பண்டங்களைப் பிரித்து எடுத்து 'கர்ஜோடாக்வின்' என்ற மருந்தை தயாரித்துள்ளனர்; இம்மருந்தை சமீபத்தில் மருத்துவத் துறையில் உபயோகிக்கப்பட்டது; குருதிப் போக்குடன் ஏற்படும் பிணிகளைக் குணப்படுத்துவதற்கு இது பெரிதும் பயனுள்ளதாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வெறுப்பும் பாகுபாடும் நீடிக்கக்கூடாது

அரசாங்கத்திற்கு மாவட்ட நிறுவனங்களின் கோரிக்கை

சென்னை, ஏப். 1—

சென்னை மாநில மாவட்ட நிறுவனங்களின் மூன்றாவது மாநாடு தோழர் எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்றது; மாநிலத்தின் பல்வேறு மாவட்ட நிறுவனங்களின் தலைவர்களும், துணைத் தலைவர்களும் வந்திருந்தனர்.

மாநாட்டில் கல்வித்துறை பற்றியும், சுகாதார முன்னேற்றம் பற்றியும் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய முறைப்படியே மாவட்ட நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அளித்து, தற்போது நீடித்துவரும் வெறுக்கத் தக்க பாகுபாட்டினை அரசாங்கம் ஒழிக்கவேண்டும் என்றும்;

ஊராட்சி மன்றங்களுக்கு நியாய அதிகாரிகள் (பஞ்சாயத்துதாரர்கள்), ஆணையாளர்கள் (கமிஷனர்கள்) நியமிக்கப்படும்போது, மாவட்ட மன்றங்களில் பணிபுரியும் உயர் பிரிவு குமஸ்தாக்களின் வயது, கல்வி பற்றிய விதிகளில் சலுகை காட்டி நியமனம் செய்யவேண்டும் என்றும்;

மாவட்ட மன்றங்களின் செயலாளருக்கு உள்ள பொறுப்புகளை ஆராய்ந்து அவர்களுக்கு குறைந்தது ரூ. 250 மாதச் சம்பளமும், ஆண்டுதோறும் ரூ. 25 ஊதிய உயர்வும், அதிகப்படி ஊதியம் ரூ. 350-ம் அளிக்கப்படவேண்டும் என்றும்;

மாவட்ட மன்றங்களை அரசாங்கம் கலைக்க முற்படுமானால், மாவட்ட மன்றங்களில் தற்போது பணிபுரிபவர்களை அரசாங்கம் வேறு வேலை கொடுத்து உதவ வேண்டும் என்றும்;

மருத்துவப் படிப்பு முடித்துக்கொண்டு பட்டம் பெற்ற டாக்டர்கள், குறைந்தது இரண்டு ஆண்டுகள் மாவட்ட மன்றங்களின் நிறுவனங்களில் பணிபுரிய அரசாங்கம் வற்புறுத்த வேண்டும் என்றும் தீர்மானங்களாக நிறைவேற்றி சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளனர் என்று தெரியவருகிறது.

தொண்டாற்றும் உணர்ச்சி

சர்க்கார் மருத்துவ மனைகளில் குறைவாக இருக்கிறதாம்

கோவை, ஏப். 3—

"புற்றுநோய் இந்தியாவில் மட்டுமல்லாது மற்ற எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது. துவக்கக் கூட்டத்திலேயே இந்தப் பிணியைக் கவனித்து சிகிச்சை செய்தால் குணமாகிவிடும். பொதுமக்களிடம் இந்த நோயின் பயங்கரத் தன்மையைப் பற்றி எடுத்துரைக்க வேண்டும்.

"அரசாங்கம் எவ்வளவு நிதி உதவியளித்த போதிலும், பொதுநல நிலையங்களில் உள்ள தொண்டாற்றும் உணர்ச்சி சர்க்கார் மருத்துவ மனைகளில் காணப்படுவதில்லை"

என்று மத்திய அரசாங்க சுகாதார அமைச்சர் அமிர்தகௌரி கூறியுள்ளார்.

தி. க. தோழர் விலகினார்

கரூர், ஏப். 2—

கரூர் நகர திராவிட கழகத் துணைச் செயலாளரும் கரூர் தினசரி மார்க்கெட் பழவியாபாரிகள் சங்கத் தலைவரும் முன்னாள் கரூர் வட்ட கைத்தறி நெசவாளர் சங்கத் தலைவரும் முக்கிய அங்கம் வகித்தவருமான தோழர் ஆர். வெங்கடசாமி அவர்கள் திராவிடர் கழகத்தைவிட்டு விலகி இன்று முதல் தி. மு. கழகத்தில் சேர்ந்துவிட்டதாக அறிவிக்கிறார். (ந. - நி.)

ஆரம்ப ஆசிரியர்களுக்குக்

கிராக்கிப்படி உயர்வு

விகிதங்கள் பற்றி விளக்கம்

சென்னை, ஏப். 4—

ஆதாரப்பள்ளிகள் உட்பட பல்வேறு நிர்வாகங்களின் கீழுள்ள ஆரம்பப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு 14—3—57 முதல் அமுலாகும் விதத்தில் கிராக்கிப்படி விகிதத்தைத் திருத்தி அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

கல்விச் சலுகைகளுக்குத் தரப்படும் மானியங்களை பல்வேறு கல்வி நிலையங்களுக்கு மதிப்பிடப்படும்போது, இந்த அதிகப்படிச் செலவும் கணக்கிடப்படும். கிராக்கிப்படிச் செலவில் பாதியை அரசாங்கம் ஏற்கும்.

புதிய கிராக்கிப்படி விகிதங்களின்படி ரூ. 20-க்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்களுக்கு ரூ. 23; ரூ. 20-க்கு மேல் 40-க்குள் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 25; ரூ. 40 சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 28; ரூ. 40-க்கு மேல் ரூ. 60-க்குள் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 29; ரூ. 60-க்கு மேல் ரூ. 100-க்குக் கீழ் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 31 அளிக்கப்படும்.

ஆச்சாரியார் கோரிக்கை ஏற்கப்படுமா?

சென்னை, ஏப். 4—

'கிறிஸ்துமஸ் தீவுகளில் நடத்த உத்தேசித்துள்ள அணு ஆயுதப் பரிசோதனைகளைக் கைவிடுவதற்கு பிரிட்டன் மறுத்தால் காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறிவிடும் என்று' சந்தேகத்திற்கு இடமின்றி பிரிட்டனுக்கு இந்திய அரசாங்கம் அறிவித்துவிடவேண்டும்; அவ்வாறு செய்தால்தான் பியுட்டனின் முடிவை மாற்றமுடியும். மனித சமுதாயத்திற்கு மகத்தான சேவை இது ஒன்றுதான்' என்று இராசகோபாலாச்சாரியார் வற்புறுத்தியிருக்கிறார்.

'இந்தியாவின் கோரிக்கையை பிரிட்டன் செவிசாய்க்காவிடில் இந்தியா காமன்வெல்த்தில் நீடிப்பது ஒழுக்கக்கேடானது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுமதி தேவையாம்!

பவானி, காவேரி பாசனப் பகுதி பற்றி அரசாங்கம்

சென்னை, ஏப். 4—

பவானி, காவேரி ஆகிய இரு நதிகளில் எந்த ஒரு வாய்க்காலிலிருந்தும் தண்ணீர் இறைத்துக் கொள்ள அரசாங்கத்தின் முன் அனுமதியில்லாமல் இயந்திரக் குழாய்கள் (பம்பு செட்டுகள்) அமைக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

கிணறுகளிலிருந்துகூட தண்ணீர் இறைத்துக்கொள்ள அனுமதி தேவையாம்.

மேற்சொன்ன வாய்க்கால்களில் இயந்திரக் குழாய்கள் அமைக்க சர்க்கார் பணத்திலிருந்து மானியம் அல்லது கடன் எதுவும் வழங்கப்படமாட்டாதாம்!

இராணுவத்திற்கு ஆஸ்டர் விமானங்கள்

2½ - இலட்சம் பவுன் செலவில் இந்தியா வாங்குமாம்

சுமார் 2½ - இலட்சம் பவுன்கள் பெறுமானமுள்ள விமானங்களையும், உதிரிபாகங்களையும் வாங்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். கண்காணிப்பு, வேவு வேலைகளுக்கு ஏற்ற 'ஆஸ்டர் - 9' என்ற இந்த விமானம், மிகவும் சிறிய நிலையத்தில் இறங்கி ஏறக்கூடியது; மணிக்கு 45 - மைல்கள் வேகத்தில் தாழப் பறக்கக்கூடியது. இந்திய இராணுவத்திற்கு வாங்கப்படும் இவற்றில் பத்து விமானங்கள் முதலில் இந்தியா வந்து சேரும்; மற்றவை பிறகு வரும்.

சொத்துக்களைப்பறிமுதல் செய்ய உத்தரவு

லாகூர், ஏப். 4—

கான் அப்துல் கபார்கானுக்கு மூன்று வழக்குகளில் விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையின் மதிப்பு ரூ. 14,000 என்றும் இதை வசூலிக்க அவருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

சிறு விளக்கம்

'வருக அண்ணாதுரை', எனத் தலைப்பிட்டு 17-3-57 'ஆனந்த விகடன்' கட்டுரை ஒன்று தீட்டியது. அக்கட்டுரையை 'நம் நாடு' 16-3-57-ந் தேதி இதழில் வெளியிட்டிருந்தது. 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டிருந்ததற்கு மாறாக, அதே தேதிய 'ஆனந்த விகடன்' இதழில் இரு இடங்களில் சொல் மாறுபாடு இருப்பதாக நமக்குக் கடிதங்கள் வந்துள்ளன. நமக்குக் கிடைத்த 'ஆனந்த விகடன்' இதழில் கண்டதையே 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. (ஆ - ர்)

ஐ. நா.-வில் நாம்!

நியூயார்க், ஏப். 4—

'ஆண்—பெண் இருவரின் மனமொத்த திருமணமே இலட்சணமுள்ளதாகும்' என்று அறிவியக்கம்கூறிவந்த சீரிய கருத்துக்களை ஐ. நா. பெண்கள் குழுவும் வற்புறுத்தியிருக்கிறது.

"ஆண்—பெண் இரு பாலருக்குமிடையே முழுச் சம்மதம் இல்லாத திருமண முறையை அறவே நீக்கிவிடவேண்டும்" என்று இந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

வற்புறுத்தல் ஏதுமின்றி விருப்பப்படி மணம் புரிந்துகொள்வதற்கு உரிமையளிக்கப்படவேண்டும் என்றும், திருமண வயது நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்றும், எல்லாத் திருமணங்களும் பதிவு செய்யப்படவேண்டுமென்றும் இந்தக் குழு வற்புறுத்தியுள்ளது.

ஆண்டவன் பெயரால் கால்நடைகள் பலியாவதா?

'தடுக்க சட்டம் ஏற்படுத்துக'

புதுடில்லி, ஏப். 4—

"ஆண்டவன் பெயரால் கால்நடைகள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்குச் சட்டம் ஏற்படுத்த வேண்டும்" என்று இந்திய அரசாங்கத்திற்கு, மிருகப் பாதுகாப்புக் குழு தந்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

சுதந்திர ஆட்சியில் இந்த அவல நிலைமை!

தொழில்துறைத் தகராறுகள் பற்றி சில தகவல்கள்

புதுடில்லி, ஏப். 4—

1957 சனவரி மாதத்தில், தொழில்துறைத் தகராறுகள் காரணமாக 3 இலட்சம் நபர் நாட்கள் நஷ்டமாயினவாம்!

இம்மாதத்தில் புதிதாக 93 தகராறுகள் ஏற்பட்டன. இவற்றில் மொத்தம் 43,201 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இந்த மாதத்தில் மொத்தம் 12 தகராறுகள் நீடித்துவந்தன. இவற்றில் சுமார் 50,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

முந்திய மாதம் நீடித்துவந்த 145 தகராறுகளில் மொத்தம் சுமார் 66,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதம் ஏற்பட்ட தகராறுகளில் எட்டு தகராறுகள் கதவடைப்புகள் காரணமாக ஏற்பட்டவைகளாகும். இவற்றில் மொத்தம் சுமார் 4,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். அவை காரணமாக மொத்தம் 60,000 நபர் நாட்கள் நஷ்டமேற்பட்டது.

இம்மாதம் 89 தகராறுகள் முடிவுற்றன. 37 தகராறுகளில் தொழிலாளர்களுக்கு முழுவதுமோ ஓரளவுக்கோ வெற்றி கிடைத்தது. 29 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றிகிடைக்கவில்லை. 21 தகராறுகளில் முடிவுகள் நிச்சயமில்லாமல் இருந்தன. 2 தகராறுகள் முடிவுகள் தெரியவில்லை.

தகராறுகளில் முக்கிய காரணங்கள் 'கூலிகள் — படிகள்', 'சிப்பந்தி குறைகள்' ஆகியவை பற்றி இருந்தன.

எகிப்து கடன் கேட்கிறது

ஐ. நா. - விடம் மனுவாம்

கெய்ரோ, ஏப். 5—

சூயஸ் கால்வாயை நிர்வகிப்பதற்கு உதவியாக ஒரு கோடி டாலர் கடன் தரவேண்டும் என்று கோரி ஐ. நா. - விடம் எகிப்து மனுச் செய்துகொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

KNOWLEDGE IS POWER

• சென்ற வருட ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஏப்ரலில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

ஏப்ரல் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

• வகுப்பில் சேர விண்ணப்பம் செய்து கொள்ள

கடைசி தேதி: 9—4—57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

தாய்குலம் அளித்த...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டார்கள் கம்யூனிஸ்டு கட்சியினர்; அவர்கள் நம்மை எதிர்த்து 43 இடங்களில் போட்டியிட்டார்கள்; அந்த 43 இடங்களிலும் அவர்கள் பெற்ற ஓட்டுக்கள் 5 இலட்சம்—நாம் பெற்ற ஓட்டுக்கள் 6 இலட்சம். அவர்கள் நம்மோடு போட்டியிட்ட 43 இடங்களிலும் பெற்ற இடங்கள் 3 தான்—தி. மு. கழகம் பெற்ற இடங்கள் 6. நம்முடைய படைவரிசை வெற்றி பெற்றுவிடக்கூடாதென்று—நமது மாபெரும் இயக்கம் தேர்தலில் வென்றுவிடக்கூடாதென கம்யூனிஸ்டுக் கட்சியும்—மற்றக் கட்சிகளும் கீழ்த்தரமான முறையிலெல்லாம் பிரச்சாரம் செய்தனர்.

"கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் தோழர் பி. இராமமூர்த்தி குளித்தலை—கரூர் போன்ற இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி ஒரு பெரிய அபாண்டத்தையே கூறினர்; திராவிட முன்னேற்றக் கழகம் பாகிஸ்தானிடம் 7 இலட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டதாம். அதனால்தான் பாகிஸ்தானில் அமெரிக்கப் படை இறங்கும்போது நாம் இந்திய இராணுவச் செலவு குறைக்கப்படவேண்டும் என்று 'போஸ்டர்' வெளியிட்டோமாம். அதற்கு காரணம் பாகிஸ்தானிடம் ரூ. 7 இலட்சம் பெற்றுக்கொண்டதால்தான் என்று மாஸ்கோவிலிருந்து பணம் வாங்கிக்கொண்டிருக்கும் இவர்கள் கூறுகிறார்கள்.

"அதுமட்டுமல்ல—நாம் தேர்தலில் ஈடுபடுவது பற்றி—'ஓடுகிற பஸ்ஸில் ஏற முயற்சிக்கிறார்கள்,' என்றார்கள்.

"நான் சொல்ல வருத்தப்படுகிறேன்—'நாங்களாவது ஓடுகிற பஸ்ஸில் 15 பேர் ஏறியிருக்கிறோம்; நீங்கள் அவ்வளவுகூட ஏற முடியவில்லை. எங்களுக்கு காலில் நல்ல பலமிருக்கிறது; உங்களுக்கு காலில் பலமே இல்லை?

"நாங்கள்தான் சரியான இடதுசாரிக் கட்சி என்று சொல்லிக்கொண்ட இவர்கள், இந்தத் தேர்தலில் (காங்கிரசிடம் திரைமறைவு ஒப்பந்தம் செய்துகொண்டோ என்னவோ) காங்கிரசுக்கு ஓட்டு போடச்சொன்னார்கள் கடைசி நேரத்தில்; அதற்கு சான்று சேலத்திலே நடந்துகொண்டதே சாட்சியாகும்.

"சென்ற தேர்தலில் நம்முடைய ஆதரவு பெறாத அபேட்சகர்கள் நின்ற இடங்களில் இவர்கள் நின்றார்கள்; அங்கெல்லாம் நாம் நமது தோழர்களை கம்யூனிஸ்டுக் கட்சிக்கே ஓட்டுப் போடும்படி சொன்னோம். ஆனால் குறுகிய மனம் படைத்த இவர்கள், காங்கிரசுக்கு ஓட்டு தேடிய வித்தையை இந்தத் தேர்தலில் பார்த்தோம்.

"இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் இடங்கள் 15; அடுத்தத் தேர்தலில் நமக்குக் கிடைக்கப்போகும் இடங்கள் 150 இது உறுதி. அதற்கான அறிகுறிகள் வேண்டுமானால் தோற்ற கழக அபேட்சகர்கள் வாங்கிய வாக்குகளைப் பார்த்தால் தெரியும். 200-ல், 300-ல், 500-ல், 600-ல்—இப்படிதான் வித்தியாசம். விழுப்புரம் தி. மு. கழக அபேட்சகர் தோற்றது 800 ஓட்டுக்கள் வித்தியாசத்தில்! செல்லிக் குப்பத்தில் மந்திரி இராமசாமி படையாச்சியை எதிர்த்து நமது கழகத் தோழர் கிருஷ்ணமூர்த்தி 2,000 ஓட்டு வித்தியாசத்தில்தான் தோற்றார்; அவர் ஒரு மாணவர்; இன்னும் படித்துக்கொண்டிருக்கிறார். எனவே இந்தத் தோல்வி வெற்றிப்படிகளில் ஒன்றாகும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுக்காக என்றென்றும் பாடுபடும் இயக்கம்; தாய்மார்களுக்குப் பாடுபடும் இயக்கம். அதன் சார்பில் நாங்கள் என்றென்றும் பாடுபடுவோம்."

'உங்களிடமிருந்து நிரம்ப கற்கவேண்டும்'

அரசாங்க ஊழியர்களிடம் நம்பூதிரிபாத் முறையீடு

திருவனந்தபுரம் ஏப். 5—

"உங்களிடந்திலிருந்து நாங்கள் கற்கவேண்டியது நிரம்ப இருக்கிறது என்பதை ஒப்புகிறோம். நீங்களும் எங்களிடமிருந்து நிரம்பக் கற்றுக்கொள்ளவேண்டும். பொதுவுடைமைக் கட்சி அமைச்சர்களாகிய நாங்கள் சனநாயக சமதர்ம ஏற்பாட்டைப் பிரதிபலிப்பவர்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இங்கு வேறு வகையான அமைப்புமுறை இருக்கக்கூடும்—இருக்கவும் இருக்கிறது. அக்குறைபாட்டைக் களைந்து, மக்களிடம் நெருங்கியத் தொடர்பு கொள்ளத்தக்க நிர்வாகத்தை உருவாக்குவதற்கான கடைக்காலை நாம் நிர்மாணிக்க வேண்டும்"

இவ்வாறு, கேரள முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன், அரசாங்க அலுவலக அதிகாரிகள்—ஊழியர்களிடம், இ. எம். சங்கரன் நம்பூதிரிபாத் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"நீங்கள் ஒரு ஏற்பாட்டின் கீழ் பயின்று உருவாக்கப்பட்டு இருப்பவர்கள்; நாங்கள் (பொதுவுடைமையர்) வேறு வகை பயிற்சியும் பாரம்பரியமும் கொண்டிருப்பவர்கள். இலட்சியத்திலும் கருத்துணர்விலும் நீங்கள் உங்களுக்குரிய குறிப்பிட்ட பாரம்பரியத்தைப் பெற்றிருப்பவர்கள்; நாங்களோ வேறு ஒரு பாரம்பரியத்தில் வந்திருப்பவர்கள். மக்கள் அனைவருடைய நலத்திற்காகவும் இவ்விரண்டு பாரம்பரியத்தையும் பிணைத்தாக வேண்டும்.

"நீங்கள் பொதுவுடைமைக் கட்சியைக் குறித்து ஏனையாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவைகளில் பெரும்பகுதி மெய்யாக இருக்கவும் கூடும். புதிய கருத்துக்களை நாங்கள் புகுத்த முயற்சிப்போம். அதிலுள்ள குறைவுகளை நீங்கள் சுட்டிக்காட்டக்கூடும். உங்களுடைய கருத்துக்களை நாங்கள் ஏற்றாலும் ஏற்கலாம்—புறக்கணித்துவிட்டாலும் விடலாம். ஆனால் எங்களுடைய கருத்துக்கள், எங்களுடன் ஒத்துழைப்பதிலிருந்து உங்களைத் தடுத்துவிடக்கூடாது.

நம்பூதிரிபாத்தையும் அவருடைய கூட்டு அமைச்சர்களையும், கேரள அரசாங்க தலைமை அதிகாரி துவக்கத்தில் வரவேற்றார்.

"யார் அதிகாரத்திற்கு வந்தபோதிலும், அவர்களுடைய அரசியல் கோட்பாடுகளைப் பற்றிக் கருதாமலும், அரசியலிலிருந்து விடுபட்டும் பணி புரிந்து வருவதுதான், ஒரு ஜனநாயக அமைப்பில் அரசாங்க ஊழியர்களுக்குள்ள கடமையாகும்"

என்று இறுதியாக தலைமை அதிகாரி அறிவித்தார்.

இக்கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்களும் அமைச்சர்களும் கலந்திருந்ததுடன், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த ஊழியர்களும் கலந்திருந்தனர்.

எம். ஜி. ஆர். படிப்பகத் திறப்பு விழா

7—4—57 காலை 9 மணிக்கு, மதுரை தெற்கு வெளிவீதி, என் 51 மனையில், மேற்படி படிப்பகத் திறப்பு விழா தோழர் என். எஸ். இராசா அவர்களால் நடைபெறும்.

திருவைகுண்டம் தி.மு.க. உறுப்பினர்களுக்கு:

7—4—57 மாலை 4 மணிக்கு பொருனையாற்று மணல் வெளியில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

ஏமப்பூர் தி. மு. க. துவக்க விழா

பொதுக்கூட்டம்

9—4—57 மாலை 5 மணிக்கு, மேற்படி துவக்க விழா ஏமப்பூரில், தோழர் நே. நடராசன் தலைமையில் நடைபெறும்; துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழியர் சத்தியவாணி-முத்து, தோழர்கள் சு. சண்முகம், தி. வ. அன்னுநாசன் பேசுவர்.

மாலை 3 மணிக்கு, தோழர் நா. பொன்னுசாமி தலைமையில் கழக ஊர்வலம் நடைபெறும்; பாராட்டுரை வழங்கப்படும்.

சென்னை—இராயபுரம் நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றம்

7—4—57 காலை 10 மணிக்கு, இராயபுரம் பி.சி.பி. சந்து, என் 7 இல்லத்தில் மேற்படி மன்றச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை-வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்

7—4—57 காலை 10-மணிக்கு தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் திருக்குறளில் 'புகழ்' என்ற அதிகாரத்தைப்பற்றி வியாசர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. மு. க. அருள்சாமி அவர்கள் விரிவுரையாற்றுவார்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

7—4—57 காலை 10 மணிக்கு மேற்படி மன்றத்தின் சார்பில் சென்னை—இராயபுரம் பனைமரத் தொட்டி, அட்டபாளையம் பஜனைக்கோவிலில் தோழர் அ. முனுசாமி தலைமையில் தோழர்கள் ம. செல்வராசன், ஆர். எல். லிங்கராசு, கு. பெ. துரைசாமி, ந. சண்முகம் ஆகியோர் 'இலக்கியமும்—சமுதாயமும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவர்.

வேலூர் நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு:

7—4—57 காலை 9 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழக

எம். எல். ஏ.-க்களுக்கு பாராட்டுக் கூட்டம்

7—4—57 மாலை 6 மணிக்கு சென்னை—திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகங்கள், துணை அமைப்புகள் சார்பில், திருவேட்டீசுவரன் பேட்டை சுபத்திராள் தெரு, புரட்சித் திடலில், வெற்றி பெற்ற தி. மு. கழகத் தோழர்களைப் பாராட்டி, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து, பி. பாலசுப்பிரமணியம், கா. அப்பாதுரையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கூட்டத்தில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், 41-வது வட்டத்தில் தீ விபத்தால் சேதமான குடிசைகளைச் செப்பனிட நிதி வழங்குவார்.

பாராட்டுக்கூட்டங்கள்

8—4—57 மாலை 6½ மணிக்கு, மதுரை திலகர் திடலில், மதுரை நகர தி. மு. கழகச் சார்பில் தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டுவதற்காக ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் எஸ். முத்து மற்றும் பலர் பேசுவர்.

* * *

7—4—57 மாலை 6½ மணிக்கு, சென்னை — பெரம்பூர் (6-வது வட்டம்) தி. மு. கழகச் சார்பில், பெரம்பூர் செல்வயல் ரோடில் (புத்தர் நிலயத்திற்கு அருகில்) தோழர் க. சிதம்பரம் தலைமையில், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டுவதற்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் கி. மனோகரன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

மாலை 3 மணியளவில், பெரம்பூர் ஏரி மைதானத்திலிருந்து ஓர் ஊர்வலம் புறப்படும்.

சென்னை—தூளை கே. வி. கே. சாமி நினைவு படிப்பகம்

7—4—57 காலை 9 மணியளவில், மேற்படி படிப்பகத்தின் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது வெற்றி பெற்ற தோழியர் சத்தியவாணி-முத்து அவர்களுக்கு ஊர்வலமும், பாராட்டுக் கூட்டமும் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும்.

நித்தார் நினைவு நாள்

7—4—57 காலை 9 மணிக்கு, புளியந்தோப்பு - போலுநாய்க்கன் தெரு, எண் 15 இல்லத்தில், மறைந்த தோழியர் தி. தேவகி அம்மையாரின் நினைவு நாள் தோழியர் சத்தியவாணி-முத்து தலைமையில் நடைபெறும். தோழர் என். சிவரத்தினம் இரங்கலுரையாற்றுவார்.

கல்விக் கோடைவள்ளல் அழகப்பா மறைந்தார்

சென்னை, ஏப். 5—

தென்னாட்டுக் கல்விக் கோடைவள்ளல் டாக்டர் ஆர். எம். அழகப்ப (செட்டியார்) இன்று காலை 11-15 மணிக்கு சென்னையில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று அவருடைய 49-வது பிறந்த நாளாகும். மக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அவர், ரூ. 1-கோடிக்குமேல் நன்கொடை அளித்துள்ளார்.

[அவரது மறைவு தமிழகத்திற்குப் பெரும் நஷ்டமாகும்; அவரது பிரிவால் கவலையில் ஆழ்ந்திருக்கும் அனைவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிறோம். — ஆ - ர்.]

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஏப்ரல்

8: சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை
9: ஏமப்பூர் (தெ, ஆ.)
10: காலை—மாயவரம் திருமணம்
மாலை—மாப்படுகை பொதுக்கூட்டம்
11: காலை—சூலூர் திருமணம்
மாலை—,, பொதுக்கூட்டம்
12: களத்தூர் (துறையூர்)
13: கரூர்
14: குளித்தலை
15: திருச்சி
17: கொளத்தூர் (மேட்டூர் அணை திருமணம்)
18: காலை—உளுந்தூர்பேட்டை கழக உறுப்பினர் கூட்டம்
மாலை—கீரனூர் (திட்டக்குடி) பொதுக்கூட்டம்
19: கருங்குழி (மதுராந்தகம்)

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஏப்ரல்

7: தள்ளம்
8: சென்னை—செம்மண்பேட்டை
11: பாபநாய்க்கன்பாளையம்
12: மேலப்பாளையம்
14: குளித்தலை பொதுக்குழு
15: அனுமந்தங்குடி
17; சென்னை—சிந்தாதிரிப்பேட்டை
18: வேலூர்—சத்துவாச்சேரி

பம்பாய் தி. மு. க.

மத்தியக் குழு உறுப்பினர் கூட்டம்

8—4—57 மாலை 6 மணியளவில், தாராவி 'திராவிடரக'த்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். அதுபோது, மே திங்களில் மக்கள் சபைக்கு செல்லவிருக்கும் தி. மு. கழக உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. தர்மலிங்கம்; கழக ஆதரவு பெற்ற தோழர்கள் என். சிவராஜ், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி ஆகியோர்கட்கு பம்பாயில் மாபெரும் வரவேற்பு அளிப்பது பற்றி முடிவு செய்யப்படும்; குழு உறுப்பினர்களும் கிளைக் கழகச் செயலாளர்களும் தவறாது வருகைதர வேண்டும் என பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

திருமணங்கள்

8—4—57 மாலை 4 மணியளவில் தனியாமங்கலத்தில் தோழர் மு. க. இளமொழி—தோழியர் அ. க. தில்லை பரமேசுவரி வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் க. அன்பழகன் தலைமையில், மணமகன் இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் எஸ். முத்து, பி. சமதர்மம் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

8—4—57 காலை 10 மணிக்கு தஞ்சை—நல்லவன்னியன் குடிக்காடு தி. மு. க. செயலாளர் தோழர் ம. வச்சிரபதி—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்த விழா, மணமகன் இல்லத்தில் தோழர் மன்னை ப. நாராயணசாமி தலைமையில் நடைபெறும்.

நகர மருந்து தயாரிப்போர் சங்கம்

7—4—57 மாலை 4 மணிக்கு, சென்னை — பெரிய வைத்திய விடுதி (ஜெனரல் வைத்தியசாலை) யில் டாக்டர் கே. நாராயணமூர்த்தி தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெறும். சென்னை மருத்துவக் குழு உறுப்பினர் எஸ். இராமசாமி சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.